# சிங்கள மக்களின் மரபுசார் வாழ்வியல் முறைகள்

***கலாநிதி கலா சந்திரமோகன்***
சிரேஷ்ட விரிவுரையாளர், மொழி கற்கைகள் துறை
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம், இலங்கை

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5028

**அறிமுகம்**

பல்லின, பல்கலாசார, பன்மொழி, பன்மத சமுதாயத்தில் வாழும் மக்கள் தாங்கள் வாழ்கின்ற சமுதாயத்தில் வழக்கிலுள்ள கலாசாரங்கள் பற்றி அறிந்திருந்தால் மட்டுமே அச்சமுதாயத்தில் சாந்தியுடனும் சமாதானத்துடனும் வாழ முடியும். அவ்வாறில்லாதுவிடின் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதனையே இலங்கையில் கடந்த முப்பது வருட கால யுத்தம் எமக்குக் கற்றுத் தந்த கசப்பான பாடமாகும். அதனால், மேற்குறிப்பிடப்பட்ட சமுதாயத்தில் வாழும் தமிழர்கள், சிங்கள மக்கள் சார்ந்த கலாசாரங்களை அறிந்து கொள்வதும் புரிந்துகொள்வதும் காலத்தின் தேவையாக உள்ளது. ஆகவே, சிங்கள மக்களின் மரபு சார் வாழ்வியல் முறையை ஆராய்ந்து தமிழர்களுக்கு அறிமுகப்படுத்துவதனை நோக்கமாகக்கொண்டு கள ஆய்வு, நேர்காணல், பகுப்பு முறை மற்றும் தொகுப்பு முறை ஆகிய ஆய்வு அணுகுமுறைகளைப் பின்பற்றி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## சிங்கள மக்களின் மரபுசார் வாழ்வியல் முறைகள்

சிங்கள மக்களின் மரபுசார் வாழ்வியல் முறை இன்றைய வாழ்வியல் முறையைப் போன்று சிக்கலானதொன்றாக அமைந்திருக்கவில்லை. பெரும்பாலும் விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட வாழ்வியல் முறைமையாதலால் அம்மக்களுக்கு அதிகளவான ஓய்வு நேரம் கிடைத்தது. அதனால், அவர்கள் இன்றுபோல் போட்டி முறையற்ற மிகவும் எளிமையான, இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள். அத்தகைய அவர்களின் வாழ்வியல் முறைகளுள் உறைவிடம், வீட்டு உபகரணங்கள், சுகாதார பழக்க வழக்கங்கள், இல்லறவியல், வாழ்வாதாரம், உணவு, ஆடை அணிகலன்கள் ஆகிய விடயங்கள் இங்கு ஆராயப்படுகின்றன.

**உறைவிடம்**

புராதன சிங்கள மக்கள் தங்களது வரவுக்கேற்ற விதத்திலும் தங்களின் கையிருப்பிற்கு ஏற்ற விதத்திலும் தாங்கள் வசிப்பதற்குரிய சிறிய இல்லத்தை அமைத்துக்கொண்டார்கள். அம்மக்கள் இன்று போல் வீடு வாசல்களை அமைத்துக் கொள்வதற்காக பெருந்தொகையான பணத்தினைச் செலவு செய்து மாளிகைப் போன்ற வீடுகளை அமைத்துக் கொள்ளவில்லை. மாறாக, இயற்கைக்கு அமைவாக இயற்கையாகக் கிடைத்த பொருள்களைக் கொண்டே தங்களது வாழிடங்களை அமைத்துக் கொண்டார்கள்.

**சிங்கள மக்களின் மரபுசார்வீடுகள்**

பெரும்பாலான வீடுகள் வரிச்சு எனப்படும் ஒரு சட்டகத்தினுள் களிமண்ணை குழைத்து வைத்துஅமைக்கப்பட்டன. தென்னோலை, வேக்கோள், இலுக் (ஒருவகை புல்லினம்) மற்றும் பண்; (ஆற்றங்கரைகளில் வளரும் ஒருவகை கோரைப் புல்லினம்) போன்ற முற்று முழுதாகத் தாங்கள் வாழ்ந்த சுற்றுப்புறச் சூழலில் இயற்கையாகக் கிடைத்த தாவரங்களைப் பயன்படுத்தி வீடுகளின் கூரைகள் வேய்ந்து கொள்ளப்பட்டன. வீடுகளை அமைத்துக் கொள்வதற்குத் துணையாகக் கூலி கொடுத்து வேலையாட்களை அம்மக்கள் அமர்த்தவில்லை. மாறாக, அண்டை அயலவர்களுடனும் உற்றார் உறவினர்களுடனும் இணைந்தே தங்கள் வாழிடங்களை அமைத்துக் கொண்டார்கள். அவ்வீடுகளின் தரையானது பசுஞ்சாணத்தால் மெழுகப்பட்டது. எல்லா வீடுகளிலும் தூண்களுடன்கூடிய விறாந்தை (திண்ணை) அமைக்கப்பட்டிருந்தது. கையிருப்பு மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே வீடுகளின் அறைகள் தீர்மானிக்கப்பட்டிருந்தன. சிலர் சமையலறையைப் பிரதான வீட்டுடன் இணைத்துக் கட்டிக் கொண்டார்கள். சிலர் அதனைத் தனியாக பிரதான வீட்டுக்குச் சற்றுத் தொலைவில் அமைத்துக்கொண்டார்கள். சமையலறை, விறாந்தை தவிர பெண்கள் மற்றும் சிறு குழந்தைகளுக்கென அறையொன்றும் அமைத்துக்கொள்ளப்பட்டது. ஆடை அணிகலன்கள், வீட்டின் முக்கிய உபகரணங்கள் மற்றும் பெறுமதிமிக்க பொருட்கள் யாவும் இவ்வறையிலேயே பாதுகாப்பாகச் சேமித்து வைக்கப்பட்டன. வீட்டுத் தலைவர் அல்லது வீட்டின் பொறுப்பு வாய்ந்த முதியவர் வீட்டு விறாந்தையில் படுத்துறங்கும் வழக்கம் அக்காலத்தில் காணப்பட்டது.



(Vii bissa) நெற் குதிர்



தர மெஸ்ஸ (Dara messa)



விறகுப் பரன் Gawa Maduwa (மாட்டுத் தொழுவம்)

இவ்வாறன வீட்டு அமைப்பிற்கு மேலதிகமாக, வீ பிஸ்ஸ (Vii Bissa) எனப்படும் நெற் குதிர், தர மெஸ்ஸ (Dara Messa) எனப்படும் விறகுப் பரண், கவ மடுவ Gawa Maduwa எனப்படும்; மாட்டுத் தொழுவம் போன்றவை வீட்டுத் தோட்டத்தில் பொருத்தமான இடங்களில் அமைத்துக்கொள்ளப்பட்டன. கிராமங்களில் வாழ்ந்த செல்வந்தர்களின் வீடுகள் சற்று விசாலமானவையாகவும் சில அறைகளைக்

கொண்டவையாகவும் அமைந்திருந்தன. அவற்றின் சுவர்கள் சுண்ணம் பூசப்பட்டு கூரைகளுக்கு ஓடு பொருத்தப்பட்டதோடு தரைக்குச் சீமெந்து பூச்சும் இடப்பட்டிருந்தது. அந்தவகையில், அவர்களின் வீடுகள் சாதாரண மக்களின் வீடுகளை விட சற்று வசதி வாய்ப்புக்களுடன் கூடியவையாக அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். சிங்கள மக்களின் இத்தகைய கிராமப்புற மரபுசார் உறைவிட கட்டமைப்பு பல்லாண்டு காலங்கள் கழிந்தபோதும் இன்றும் அவ்வாறே காணப்படுகின்றமையை அவதானிக்கூடியதாவுள்ளது.

### வீட்டு உபகரணங்கள்



சிறிய பெட்டகம், பலகையிலான மேசை, ஓரிரண்டு கதிரைகளே மரபுசார் வீடுகளில் பிரதானமாகக் காணப்பட்ட பொருட்களாகும். இவை தவிர வீட்டின் தலைமகன் அல்லது ஆண்மகன் படுத்துறங்குவதற்காக விறாந்தையில்லனு எந்த (Lanu öĺntha) எனப்படும் கயிற்றுக் கட்டிலொன்றும் வைக்கப்பட்டிருந்தது. மேலும் விறாந்தையில்; எப்பொழுதும் பாயொன்று விரித்து வைக்கப்பட்டிருக்கும். அதுவே வீட்டுக்கு வருகை தரும் விருந்தினருக்குரிய அதி உயர் ஆசனமாகவும்; கருதப்பட்டது. வீட்டுக்கு வருகை தரும் மதகுருமாருக்கு இன்று போலவே அன்றும் கதிரையில் வெள்ளை நிற விரிப்பொன்று விரிக்கப்பட்டது. பாயானது, அக்கால மக்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்தமையால், அது அம்மக்களின் வாழ்வில் மிக முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகக் காணப்பட்டது. ஆதலால், இரண்டு பக்கங்களிலும் கயிறுகள் தொங்கவிடப்பட்டு அவற்றுக்குள் பாய்கள் பாதுகாக்கப்பட்டன. அது சிங்களத்தில் பெதுரு ஆன (Peduru Aana) என அழைக்கப்பட்டது. வீட்டுக்கு வரும் விருந்தினருக்குக் குறைந்த பட்சம் வெற்றிலையையாவது வழங்கும் வழக்கம் அக்காலச் சிங்களவர்களிடம் காணப்பட்டமையால் (Bulath Heppuwa) வெற்றிலைத் தட்டும் கிரய (Giraya) பாக்கு பெட்டியும் அக்கால மக்களின் வாழ்வில் மிக முக்கியத்துவம் பெற்றன. ஆதலால், அவை அனைத்து வீடுகளிலும் இன்றியமையாத உபகரணங்களாயின.



Pöĺttagama *(பெட்டகம்)*



Lanu öĺntha *(கயிற்றுக்கட்டில்)*




Peduru aana *(பாய்)*

Heppuwa *(வெற்றிலத் தட்டு)*

அக்காலத்தில் வீடுகளில் விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டன. அவ்விளக்குகள் லாம்புவ (Laampuwa) என அழைக்கப்பட்டன. அவை தேங்காய் எண்ணைய், இலுப்பெண்ணெய் போன்றவற்றால் ஏற்றப்பட்டன. மண்ணெண்ணெய் பாவனைக்கு வந்ததன் பின்னரே குப்பி விளக்கு மற்றும் சிமினியிடப்பட்ட விளக்குகள்

பாவனைக்கு வந்தன. ஏதாவது அவசர சந்தர்ப்பங்கள் அல்லது சிறப்புச் சந்தர்ப்பங்களில் வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்வதற்காகப் பந்தம் அல்லது கொப்பரா பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. பெரும்பாலும் பந்தங்கள் தென்னோலை அல்லது தென்னம் பாலையால் செய்யப்பட்டன.





**Laampuwa *(விளக்கு)***







**Panthama *(பந்தம்)***

பழங்கால மக்களின் வாழ்வில் பயன்படுத்தப்பட்ட அநேகமான உபகரணங்கள் சமையலறையுடன் தொடர்புபட்டவையாகவே காணப்பட்டன.



Kussiya *(சமையலறை)*



ValanmöÍssa *(மண் பாத்திரப் பரண்)*




Lipa, messa *(அடுப்பும் பரணும்)*

சிங்களவர்கள் சமையலறையைக் குஸ்ஸிய (Kussiya) என அழைக்கின்றனர். உணவு சமைப்பதற்காக அக்காலத்தில் களிமண்ணாலான உபகரணங்களே பயன்படுத்தப்பட்டன. சமையலறையில் மூன்று கற்களை வைத்து அதனைக் களிமண்ணால் பூசி விறகு அடுப்பை அமைத்துக்கொண்டார்கள். அடிக்கடி அவ்வடுப்புக்குச் சாணம் பூசி, மெழுகி, அதனை மேலும் மெருகுபடுத்திக்கொண்டார்கள். அடுப்பு மேலே அமைத்துக் கொள்ளப்பட்ட விறகு பாதுகாப்பாக வைத்திருக்கும் இடம்

தரமெஸ்ஸ (Thara messa) எனப்பட்டது. அத்தோடு அது அக்கால மக்களால் பயன்படுத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு வழிமுறையாகவும் விளங்கியது. அதாவது, பலாக்காய், பலாவிதை, ஈரபலாக்காய், மரமுந்திரிகை, கோப்பி, பாக்கு, புளி, தானியங்கள், கருவாடு போன்ற பொருட்களை உலர வைத்துக்கொள்ளவும் அவற்றைப் பூச்சி மற்றும் புழுக்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும் தரமெஸ்ஸ பயன்படுத்தப்பட்டது. மேலும், அம்மக்களால் இதுபோன்றதொரு பரண், மண் பாத்திர பண்டங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கும் அமைத்துக்கொள்ளப்பட்டது.




Lunukatta *(உப்புச்சாடி)*



Iramane *(தேங்காயத் துருவி)*



Mirisgala *(அம்மி)*




Kuran Gala *(குரக்கன் அரைக்கும் கல்)*

லுனுகட்ட (Lunukatta) எனப்படும் உப்புச் சிரட்டை, இரமணை (Iramana) எனப்படும் தேங்காய்த்துருவி, மிரிஸ்கல (Mirrisgala) எனப்படும் அம்மி, வங்கெடிய (Vangediya) எனப்படும் உரல் போன்றவை அக்காலத்தில் அனைத்து மக்களின் வீடுகளிலும் இருந்த இன்றியமையாத உபகரணங்களாகும். இவைதவிர ஒரு வகை பண்ணை இனத்தைச் சார்ந்த இலை, மற்றும் தென்னோலையால் இழைக்கப்பட்ட குல்ல (Kullla) சுளகு, வட்டி



(Vatti) தட்டு, பெட்டி போன்றவையும் பயன்படுத்தப்பட்டன. சமையலறையில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களுள் மன்ன (Manna) எனப்படும் பெரிய கத்தி, மேசைக்கத்தி ஆகியவை முக்கிய இடத்தை வகித்தன. அதற்கு மேலதிகமாக மரங்களை வெட்டுவதற்கும் விறகுகளை பிளப்பதற்கும் பொரவ (Porawa) எனப்படும் கோடாரி பயன்படுத்தப்பட்ட அதே வேளை விவசாயச் செயற்பாடுகளுக்காகப் பல்வேறு வகையான காடு வெட்டும் கத்திகள், அரிவால்கள் மற்றும் மண்வெட்டி, அலவாங்கு, கலப்பை போன்ற ஆயுத வகைகளும் பயன்படுத்தப்பட்டன.



Vatti *(தட்டு)*




Vatti *(பெட்டி)*



(Kalaya) குடம்



DeköÍtta *(அரிவால்)*



Nagula *(கலப்பை)*

தண்ணீர் சேகரித்து வைப்பதற்காக அக்காலத்தில் மட்குடங்கள் பயன்படுத்தப்பட்டன. அவை சமையலறையின் ஒரு மூலையில் கொலபத்த (Pelapatha) எனப்படும் பாக்கு மட்டைகளின் மேல் வைக்கப்பட்டு சிரட்டையால் அல்லது சிறிய ஓலைப் பெட்டியால் மூடப்பட்டிருந்தன. அநேகமான வீடுகளில் சமையலறைக்கு அண்மையில் பாத்திர பண்டங்களை வைப்பதற்காக வலங்மெஸ்ஸ (ValangMessa) எனப்பட்ட ஒரு பாத்திரப்பரண் அமைக்கப்பட்டிருந்தது. அதிலும் எப்பொழுதும் ஒரு தண்ணீர்க்குடம் வைக்கப்பட்டிருக்கும். பழங்காலத்தில் வாழ்ந்த சிங்கள மக்களின் சமையலறையில் களிமண்ணாலான உபகரணங்களே காணப்பட்டன. அந்தவகையில் முட்டி (பானை), ஹட்டி (சட்டி), எத்திலிய (சட்டி), கொரஹ (குரசு), நேம்பிலிய (அரிசி அரிக்கும் பாத்திரம்), கரமூடிய (மூடி), மடக்குவ (மூடி), மெட்டிகோப்பய (களிமண்கோப்பை) போன்றவை பல்வேறு செயற்பாடுகளுக்கேற்ற வகையில் பல்வேறு வடிவங்களில், அளவுகளில் செய்யப்பட்டிருந்தன. அத்தோடு சிரட்டையால் செய்யப்பட்ட அகப்பையும் அக்காலத்தில் பயன்பாட்டில் இருந்தது.



Mutti *(பானை)*



Hattiya *(சட்டி)*



Kara muudiya *(மூடி)*



Koraha *(குரசு)*



Neembiliya *(அரிசி அரிக்கும் பாத்திரம்)*

உணவானது களிமண் கோப்பைகளிலேயே பரிமாறப்பட்டன. ஆடம்பரமாக உபகரணங்களை வாங்கிக் குவிக்காது இயற்கையாகக் கிடைத்த பொருட்களைக் கொண்டு தேவைக்கேற்ற உபகரணங்களை மட்டும் அமைத்து பயன்படுத்தியமை அக்கால சிங்களவர்களின் பக்குவ நிலையையும் வாழ்வின் யாதார்த்தத்தைப் புரிந்து கொண்டு வாழ்ந்தமையையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

### சுகாதார பழக்கவழக்கங்கள்

வீடு வாசல்களைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்காக போலத்த (Bolatha) ஒரு வகைச் செடியின் கிளைகள்), தென்னந் தும்பினாலான கொஸ்ஸ (தும்புத்தடி), தென்னை ஈர்க்கினாலான இலபத்த எனப்படும் விளக்குமாறு போன்றவற்றைப் பயன்படுத்திக்கொண்டார்கள். அத்தோடு கொரக்கஹ எனப்படும் புல்லினாலான விளக்குமாறும் பயன்படுத்திக்கொள்ளப்பட்டது.



Bolaththa (ஒருவகைப் புல்லாலான விளக்குமாறு)



Ilapaththa (விளக்குமாறு)

மேலும், கூரையிலிருக்கும் சிலந்தி வலைகளைத் தூய்மைப்படுத்துவதற்காகக் கெப்பட்டியா கிளுவை (Bolatha) போன்ற மரங்களின்; கிளைகள் பயன்படுத்தப்பட்டன. வீடு மெழுகுவதற்காகச் சாணத்துடன் புற்றுமண்ணையும் கலந்து பயன்படுத்திக்கொண்டார்கள். நீரைப் பெற்றுக்கொள்வதற்கு அநேகமாக எல்லா வீடுகளிலும் கிணறு இருந்தது. அத்தோடு வயல்வெளியில் குளிப்பதற்குரிய கிணறும் தோண்டப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, குளங்கள், ஆறுகள், நீரோடைகள், வாய்க்கால்கள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டன. மலைப்பாங்கான பிரதேசங்களில் ஊற்று நீரும் பயன்படுத்தப்பட்டது. ஆடைகளைச் சுத்தப்படுத்துவதற்கு ஹேன் மாமா (வண்ணான்) மற்றும் ரெதி நெந்தாவின் (வண்ணாத்தி) உதவி பெற்றுக்கொள்ளப்பட்டது. அக்கால மக்கள் தங்களது மலசலகூடங்களை வீட்டிலிருந்து சற்று தொலைவிலேயே அமைத்துக்கொண்டார்கள். அது அவர்கள் சுகாதாரம் தொடர்பாகக் கொண்டிருந்த அவதானத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

### அக்கால மக்களது இல்லறவியல்

அக்கால சிங்கள மக்கள் கூட்டு குடும்ப வாழ்வியல் முறையைப் பின்பற்றியதாகவே அறிய முடிகின்றது. அந்தவகையில் ஒரு குடும்பத்தில் தாத்தா, பாட்டி, தந்தை, தாய், பிள்ளைகள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள் போன்ற அனைவரும் ஒரு வீட்டில் ஒரே குடும்பமாக வாழ்ந்து ள்ளார்கள். அநேகமான குடும்பங்களில் குறைந்தளவு ஆறு அல்லது ஏழு பிள்ளைகளும் கூடியளவு பதின்மூன்று அல்லது பதினான்கு பிள்ளைகளும் இருந்துள்ளார்கள். தங்களது விவசாய நடவடிக்கைகளுக்கு ஆண் பிள்ளைகளின் உதவி தேவையாக இருந்தமையால் ஒவ்வொரு குடும்பத்திலும் வேண்டுதல் புரிந்தேனும் ஒரு ஆண் குழந்தையைப் பெற்றுக்கொண்டார்கள்.

புழங்கால சிங்கள மக்களின் வாழ்வியல் முறையானது தந்தைவழிசார் வாழ்வியல் முறையாகவே காணப்பட்டது. குடும்பத்தின் சகல தேவைகளையும் அவரே நிறைவேற்றி வைத்தார். ஆதலால், அவரது மனைவியானவர், கணவனை மிகவும் அன்புடனும் மரியாதையுடனும் நடத்தியமையை அறிய முடிகின்றது. முதலாவதாக கணவனுக்கே உணவு பரிமாறுதல், கணவன் உண்ட பின்பே தான் உண்ணுதல், கணவன் வந்ததும் எழுந்து நிற்றல், கணவன் அமர்ந்துள்ள ஆசனத்திற்குச் சற்று உயரம் குறைந்த ஆசனத்தில் அமருதல் போன்ற பழக்கவழக்கங்கள் அக்கால மனைவிமார்களால்கடைபிடிக்கப்பட்டன. திருமணத்தின் பின்னர் தாயும் தந்தையும் அக்குடும்பத்திலேயே வாழ்ந்து சகல விதத்திலும் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக விளங்கியுள்ளார்கள். பிள்ளைகள் விகாரைகள் அல்லது குருகெதர (பாடசாலை) போன்ற இடங்களில் கல்வி அறிவைப் பெற்றுக்கொண்டார்கள். பிள்ளைகளுக்குத் தாய்மொழி, கணிதம், ஒழுக்கநெறி, சமயம் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. ஆண்பிள்ளையாயின் தந்தையின் தொழிலிலும் பெண்பிள்ளையாயின் சமையல், தையல் மற்றும் வீட்டு முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட விடயங்களிலும் நிபுணத்துவம் பெற்றிருத்தல் அவசியமாகக் கருதப்பட்டது. பிள்ளைகள் குறிப்பிட்ட வயதையடைந்தவுடன் திருமணம் செய்து வைத்தல் பெற்றோர்களின் கடமையாகக் கருதப்பட்டது. மரபுசார் சிங்கள மக்களிடையே நான்கு வகையான திருமண முறைகள் காணப்பட்டன.

**(அ). தீக விவாஹய** (Deega Vivaahaya)

மணமகன், மணமகளை திருமணம் புரிந்து தனது இல்லத்திற்கு அழைத்துச் செல்லல் தீக விவாஹய எனப்பட்டது.

**(ஆ). பின்ன விவாஹய** (Binna Vivaahaya)

திருமணத்தின் பின்னர் மணமகன், மணமகள் வீட்டில் தங்கிவிடுதல் பின்ன விவாஹய எனப்பட்டது.

**(இ). எக்கெய கேம** (Ekageya KööÍÍma)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களுக்கு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தல் எக்கெய கேம (ஒரு வீட்டு உணவு) எனப்பட்டது.

**(ஈ). காதல் திருமணம்**

மனமொத்த இருவர் ஒருவரையொருவர் விரும்பி திருமணம் செய்துகொள்ளல்.

**திருமண முறை**

திருமணத்திற்காகப் பொருத்தமான மணமகன் மற்றும் மண மகளைத் தெரிவு செய்துகொண்டதன் பின்னர், திருமணத் திற்குரிய நாள் குறிப்பதற்காக அல்லது மணமகளைச் சந்திப்பதற்காக மணமகள் வீட்டுக்குச் செல்லுதல் வழக்கமாகும். அதற்கமைய, மணமகனும் வீட்டினரும் மணமகள் வீட்டுக்குச் செல்வார்கள். அன்றைய தினம் மனமகள் வெள்ளைத் திரையால் மூடப்பட்டட வெற்றிலைத் தட்டினை எடுத்துச் சென்று மணமகனை வரவேற்பார். மணமகன், அத்தட்டிலிருந்து வெற்றிலையை எடுப்பதன் மூலம் தனது விருப்பத்தைத் தெரிவித்ததன் பின்னர், லித்த (litha) எனப்படும் பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்படும் சுப நேரத்தில் இருவருக்கும் பொருத்தம் பார்த்து அதற்கேற்றவகையில் திருமணத் திகதி குறிக்கப்படும். திருமண நாளுக்கு முதல் நாள் மணமகன் தனது நண்பருடன் மணமகளின் வீட்டுக்குப் பரிசுப் பொருட்களைக் கொண்டு சென்று கொடுப்பார்; மணப்பந்தல் ஏறுதல், மணமகன் மற்றும் மணமகளின் கைகளில் தண்ணீர் ஊற்றுதல், மங்கள தாலி மற்றும் மோதிரம் அணிவித்தல், தேங்காய் உடைத்தல், மங்கள பாடல் இசைத்தல், மணமகளின் தாய்க்கு ஆடையொன்றைப் பரிசாக வழங்குதல், வெற்றிலை மற்றும் சில்லரைகளை நிலத்தில் போடுதல், மணப்பந்தலில் இருந்து இறங்குதல், சுப நேரத்தில் மணமக்கள் வெளியேறுதல்; ஆகியவை சிங்கள திருமணத்தின் சம்பிரதாயப் பூர்வமானச் செயற்பாடுகள் ஆகும்.



Mangala Uwala *(மணமக்கள்)*



Pooruwa *(மணமேடை)*



Athpen vöİkkereema *(தண்ணீர் ஊற்றுதல்)*



Bulath Bimatta Thöİmeema

*(வெற்றிலை கீழே போடுதல்)*

பழங்காலத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த முறை மச்சான் மற்றும் முறை மச்சாள் ஆகியோர்களுக்கிடையே நடைபெறும் திருமணமே மிகவும் வெற்றிபூர்வமானத் திருமணமாகக் கருதப்பட்டது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த முறை மச்சான் மற்றும் முறை மச்சாளாக விளங்கியவர்கள், தாயினது சகோதரனது பிள்ளைகளும்; தந்தையினது சகோதரியின் பிள்ளைகளுமாவார்கள். தாயின் சகோதரியின் பிள்ளைகளும் தந்தையின் சகோதரனின் பிள்ளைகளும் சகோதரர்களாவே கருதப்பட்டார்கள். ஆகவே, அவர்களுக்கிடையோன திருமணம் தடைசெய்யப்பட்டிருந்தது. அத்தோடு சமூக விதியை மீறி திருமணம் செய்தல் கடுமையான குற்றமாகக் கருதப்பட்டு அத்தகையவர்களுக்குக் கடுமையான தண்டனைகளும் வழங்கப்பட்டன.

பழங்கால சிங்கள மக்களிடையே திருமணத்தின்போது நடத்தை, கல்வி, செல்வம் மற்றும் சீதனம், குலம் போன்றவை கருத்தில் கொள்ளப்பட்டன. குலத்தைப் பொறுத்தளவில் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள் அக்குலத்திலேயே திருமணம் முடித்துக் கொண்டார்கள். அவ்வாறு இல்லாதுவிடின் அத்திருமணம் தோல்வியில் முடியும் என்ற நம்பிக்கை அம்மக்களிடம் காணப்பட்டது. அநேகமான குடும்பங்களில் ஆண்பிள்ளைகள் மற்றும்; அக்குடும்பத்திலுள்ள பெரியவர்கள் மணமகளின் குடும்பத்திலிருந்து கிடைக்கப் பெறும் சீதனம் தொடர்பாக மிகவும் அவதானத்துடன் செயற்பட்டமையால் அநேகமான பெண்களுக்குச் சீதனம் பாரிய சிக்கலை ஏற்படுத்தவதாக அமைந்திருந்தது. ஆயினும், அனைத்துப் பெற்றோர்களும் தங்களது மகளுக்குத் திருமணம் செய்கின்றவேளை தங்களால் முடிந்தளவு உதவிகளைச் செய்தார்கள். சில சந்தர்ப்பங்களில் இளைஞர்களும் யுவதிகளும் பெற்றோர்களின் எதிர்ப்பிற்கு மத்தியில் திருமணம் செய்தாலும் ஒரு குழந்தை பிறந்தவுடன் அவர்கள் தங்களது பிள்ளைகளைக் குடும்பத்துடன் இணைத்துக் கொண்டார்கள். இன்றுபோல் அன்று திருமணமானது பதிவு செய்யப்படவில்லை. பொருத்தமான வயது வந்தவுடன் ஒன்றாக வாழ்வதற்கு இருவரினதும் விருப்பமும்

பெற்றோர்களின் ஆசீர்வாதமும் முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட்டன. பொருத்தமான சுபநேரத்தில் முக்கியமான சம்பிரதாயங்களைச் செய்து மணமகள் மணமகனின் வீட்டுக்கு அழைத்து வரப்பட்டார். சில செல்வமுடைய குடும்பங்களில் மட்டும் திருமண விழா கொண்டாடப்பட்டது. மணமக்களுக்கிடையேயிருந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே அக்காலத்தில் இல்லறவியல் இடம்பெற்றது. ஆயினும், அந்நம்பிக்கைக்குக் குந்தகம் ஏற்பட்டு இருவருக்குமிடையே முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கணவனால் மனைவி வீட்டை விட்டு அனுப்பி வைக்கப்பட்டார். மனைவி தனது பெற்றோர் வீட்டுக்குச் சென்றுவிட்டால் கணவன் அங்கு சென்று மனைவியை மீண்டும் அழைத்து வருவது வழக்கமாக இருந்தது. அவ்வழக்கம் இன்றும் சிங்கள மக்கள் மத்தியில் காணப்படுவதனை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. பழங்கால கணவன் மனைவியர் எச்சந்தர்ப்பத்திலும் திருமண வாழ்க்கையை முறித்துக் கொண்டு விவாகரத்து செய்துகொள்ளவில்லை. ஆனால், அவ்வழக்கம் இன்றைய சமுதாயத்தில் சாதாரணதொரு விடயமாக மாறியுள்ளமையைக் காணலாம். மன்னிக்க முடியாத குற்றம் இழைத்திருப்பின் மட்டுமே அவர்கள் பிரிந்து சென்றார்கள். அவர்களுள் சிலர் மறுமணம் செய்து கொண்டார்கள். சிலர் மறுமணம் செய்து கொள்ளாது தனியாக வாழ்நாளைக் கழித்தார்கள்.

**வாழ்வாதாரம்**

பண்டைய சிங்கள மக்களின் பிரதான வாழ்வாதாரமாக அமைந்திருந்தது விவசாயம் ஆகும். எல்லா குடும்பங்களுக்குமே மேட்டு நிலமும் தாழ் நிலமும் இருந்தன. அவ்வாறு காணி இல்லாதவர்கள் செல்வந்தர்களின் காணிகளில் தொழில் புரிந்தார்கள். யல (சிறுபோகம்), மஹா (பெரும்போகம்) எனப்படும் இரு போகங்கள் பயிர் செய்யப்பட்டன. பொதுவாக விவசாயத்துடன் தொடர்புபட்ட பல தொழில்களில் அவர்கள் ஈடுபட்டார்கள். நெற் கதிர் முற்றிய வேளைகளில் அவற்றை உண்ண வரும் குருவிகளை விரட்டும் பொறுப்பு குழந்தைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதேபோல் யானை, மான், ஆடுமாடுகளிலிருந்து பயிரைப் பாதுகாத்தல் பெரியவர்களின் கடமையாகவிருந்தது. மேலும், விவசாயிகள் வயலில் பயிர்களை உண்ண வரும் குருவிகளுக்காகப் பயிரின் ஒரு பகுதியை ஒதுக்கி வைத்தார்கள். அது குருலு பாலுவ எனப்பட்டது. நெல், குரக்கன், சோளம், தினை, வரகு, பயறு, கௌப்பி போன்ற தானிய வகைகளும் மரக்கறி, கிழங்கு, பழங்கள் போன்றவையும் விவசாயிகளால் பயிர் செய்யப்பட்டன. அக்காலத்தில் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட பல குலங்கள் இருந்தன. குலம் சிங்கள மொழியில் குலய எனப்பட்டது. குலத்தை அடிப்படையாகக்கொண்டே தொழில்கள் வகைப்படுத்தப்பட்டிருந்தன.

(அ). கொவி குலய - விவசாயத் தொழிலுடன் தொடர்புடைய குலம்

(ஆ). கராவ குலய - மீன்பிடி தொழிலுடன் தொடர்புடைய குலம்

(இ). ஹாலி குலய - கறுவா தொழிலுடன் தொடர்புடைய குலம்

(ஈ). ஆச்சாரி குலம் - ஆயுதத் தொழிலுடன் தொடர்புடைய குலம்

(உ). படஹெல குலய - பானை வனைதல் தொழிலுடன் தொடர்புடைய குலம்

(ஊ). ரதா குலய - சலவைத் தொழிலுடன் தொடர்புடைய குலம்

(எ). அம்பெட்ட குலய - சிகையலங்காரத் தொழிலுடன் தொடர்புடைய குலம்

இவ்வாறு பல குலங்கள் காணப்பட்ட போதும் அக்காலச் சமூகத்தில் மிக உயர்வான குலமாகக் கருதப்பட்ட குலம் விவசாய குலமாகும்.

**உணவு முறை**

மரபுசார் சிங்கள மக்களின் பிரதான உணவாக இருந்தது நெல்லரிசிச் சோறு ஆகும். அது தவிர குரக்கன், தினை போன்ற பல்வேறு வகையான தானியங்களும் அவர்களது உணவில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. கஞ்சி, அப்பம், இடியப்பம் போன்றவை அக்கால மக்களின் உணவாக அமைந்திருந்தன. பலாக்காய் அவர்களது உணவில் பிரதான இடத்தைப் பெற்றது. அரிசி இல்லாத காலங்களில் பலாக்காயே அரிசியின் வெற்றிடத்தை நிரப்பியது. ஆதலால், சிங்களவர்கள் கொஸ்கஹா Kossgaa (பலா மரம்) என்பதை பத்கஹா Bathgaa (சோறு மரம்) என்றும் குறிப்பிட்டார்கள்.



Kevili (பலகாரம்)



Bath Mesha (சோறும் கறியும்)





அனைத்து திருவிழாக் காலங்களிலும் பாற்சோறு சமைக்கப்பட்டது. அது தவிர கொண்டைப் பனியாரம், அதிரசம், பயற்றம் பனியாரம், ஆஸ்மி, வெலி தலப்ப, ஹெலப்ப போன்ற பலகாரங்கள் செய்யப்பட்டன. அத்தோடு வில்வம் பூ பானம், தேங்காய்ப் பூ கீரை பானம், ஆவாரைப்பூ பானம் போன்ற பான வகைகளும் அவர்களால் அருந்தப்பட்டன.

**ஆடை அணிகலன்கள்**

பொதுவாகச் சிங்களவர்கள் இந்நாட்டு காலநிலைக்கேற்பவே ஆடைகளை அணிந்தார்கள். ஆண்கள் வீட்டில் இருக்கின்றபொழுது சரம் (சாரம் அல்லது லுங்கி) மட்டும் அணிந்தார்கள். வீட்டிலிருந்து வெளியில் செல்லுகின்ற பொழுது சரம் அணிந்து கழுத்தில் துணித் துண்டினை அணிந்துகொண்டார்கள். சிலர் வட்டமான கழுத்தையும் கட்டை கையையுடைய மேற்சட்டையையும் (shirt) அணிந்துகொண்டார்கள்.



Cheeta (சீத்தை)



Saarama (சரம்)



Osary *(ஒசரி)*





செல்வந்தர்களின் ஆடை

இலங்கையின் மலைநாடுகளில் வாழ்ந்த பிரபுத்துவ குலத்தினைச் சேர்ந்தவர்கள் தங்களது தொழில் நிமித்தம் வெளியில் செல்லுகின்ற பொழுது நிலமே எந்தும் (நிலமே ஆடை) எனப்படும் ஆடை வகையினை அணிய, மாத்தறை போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த பிரபு குலத்தினர் சரத்துடன் கபாய எனப்படும் ஆடையினை அணிந்தார்கள். சாதாரணப் பெண்களைப் பொறுத்தளவில் சீத்தை எனப்படும் ஆடையையும் மேற்சட்டையையும் அணிந்தார்கள். பிரபு குல பெண்கள் சேலை அணிந்தார்கள். அது ஒசரி எனப்பட்டது. சிறுவர்களுக்கு ஆறு வயதை அடைந்த பின்னரே சரம் அணியக் கிடைத்தது. குருகுலத்தில் கல்வி கற்கச் செல்லும் ஆண் பிள்ளைகளுக்கு முழங்காலுக்குச் சற்று கீழ்வரை நீண்ட மேற்சட்டை வழங்கப்பட்டது. இளைஞர்கள் சரமும் மேற்சட்டையும் அணிந்தார்கள். சிறுமிகள் சட்டை, சீத்தை, மேற்சட்டை போன்றவற்றை அணிந்தார்கள். அவர்கள் குருகுலத்திற்குக் கல்வி கற்க செல்கின்ற பொழுது லமா சாரி எனப்படும் ஆடையை அணிந்தார்கள். திருமணத்தின் போது மணப்பெண் வெள்ளை நிரத்திலான ஒசரி அணிந்து தலைக்கு நெற்றிச்சுட்டி போன்ற ஆபரணங்களை அணிந்து கழுத்தில் ஏழு வகையான மாலைகளை அணிந்தார். மணமகன் ஆரிய சிங்கள எந்தும் (ஆரிய சிங்கள ஆடை) எனப்படும் வெள்ளை நிறச் சரமும் கைநீள மேற்சட்டையையும் அணிந்தார். பெண்கள் தங்களிடமிருந்த செ ல்வத்தின் அடிப்படையில் தங்கம், வெள்ளி, முத்து, மாணிக்கம் போன்றவற்றிலான மாலை, காப்பு, மோதிரம், தோடு போன்ற ஆபரணங்களை அணிந்துகொண்டார்கள்.

## முடிவுரை

மேற்கூறப்பட்டுள்ள விடயங்களை நோக்குகின்றபொழுது சிங்கள மக்களின் மரபுசார் வாழ்வியல் முறையானது, ஒரு கட்டுக்கோப்புடையதாகவும் சிறந்த முறையில் கட்டமைக்கப் பட்டதாகவும் காணப்பட்டமையை அறிய முடிகின்றது. அவர்களது வாழ்வியல் முறையானது இன்றைய ஆடம்பரமயமான வாழ்வியல் முறை போலல்லாது இயற்கையோடிணைந்ததாகவும் மிகவும் எளிமையானதாகவும் விளங்கியது. இயற்கையில் கிடைத்த பொருட்களைக் கொண்டே தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டுள்ளார்கள். அத்தோடு அம்மக்கள் தங்களது அண்டை அயலவர்களுடன் இணைந்து செயற்பட்டதோடு அவர்களுக்கு உதவி புரிபவர்களாகவும் விளங்கியுள்ளார்கள். அந்தவகையில் மரபுசார் சிங்கள மக்களின் இயற்கையோடிணைந்த எளிமையான வாழ்வியல் முறையானது இலங்கையில் வாழ்கின்ற சகல சமூகத்தினருக்கும் முன்மாதிரியாக விளங்குவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.